1977 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு சபையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. அறிவிப்பு

தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு மேலவையில் நிறைவேற்றப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1977-ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/77), 9—7—1977-ஆம் நாளன்று சட்ட மன்ற மேலவையில் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் அளித்து அனுப்பப்பட்டுள்ளதென்று மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(4) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—(தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடருவதற்கு முன் திருத்தங்கள் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட வேண்டும். திருத்தத்தை முன்மொழிபவர்கள் அவையில் இருந்தால்தான் அந்தத் திருத்தங்களை ஏற்றுக் கொள்ள முடியும். உறுப்பினர்கள் அவையில் இல்லையென்றால் திருத்தங்கள் தள்ளப்பட வேண்டும். ஆயினும் பல உறுப்பினர்கள் புதிதாக வந்திருக்கின்ற காரணத்தால் இன்றைக்கு இருக்கிற உறுப்பினர்கள் திருத்தத்தை முன்மொழியட்டும். இல்லாதவர்கள் நாளை வந்து முன்மொழியலாம்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே,

கீழ்க்காணும் திருத்தங்களை முன்மொழிகிறேன் :—

(1) காவிரி வாய்க்கால் பகுதியில் உரிய காலத்தில் தண்ணீர் வாராததைப் பற்றியும்,